வருகிறார்கள். பல்வேறு குற்றம் புரியாமலேயே அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பலர் சிறைத் தண்டனை அனுபவித்திருக்கிறார்கள். பல்வேறு வகைகளிலே கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. கேரள மாநிலத்திலே இதற்கென்று ஒரு ஆணையம் அமைத்து இருக்கின்றார்கள். வெளிநாடுகளிலே வாழ்கிற மக்களுக்கு ஓர் ஆணையத்தை அமைத்திருப்பதைப்போல, ஏன் தமிழகத்திற்கென ஓர் ஆணையம் அமைக்கக்கூடாது . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் ஏற்கெனவே வெட்டுத் தீர்மானமாகக் கொடுத்திருக்கின்றீர்கள். இதை நான் படித்திருக்கின்றேன். இது என்னுடைய ஆய்வில் உள்ளது.

(உ) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியாளர்களின் பதவி உயர்வுக்கு இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் சட்டத்தின்படி அமலாக்கப்படவேண்டிய தாழ்த்தப்பட்ட, பழங்குடி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டின்படி, பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களுடைய பணி நியமனம் பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் பேராசிரியர்கள் 176 ஆதி திராவிடர்களுக்கும், ஊழியர்கள் 500 பேருக்கும் மேலே பணி கிடைக்க வாய்ப்பு இருந்தும் அது பூர்த்தி செய்யப்படவில்லை. இதுசம்பந்தமாக அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அடுத்து, சூறாவளிக் காற்றினாலே பாதிக்கப்பட்ட . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றித்தான் பேசவேண்டும். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.

(ஊ) செங்குன்றம் பகுதியிலிருந்து ஆந்திராவிற்கு ரேஷன் அரிசி கடத்தப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் பகுதியிலிருந்து ரேஷன் அரிசி ஆந்திரா பஸ் மூலமாக கடந்த பல மாதங்களாக கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. 2 டன் அரிசி பஸ்ஸிலிருந்து பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதேபோல், அரிசி எங்கிருந்து வாங்கினார்கள்; அவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒட்டுமொத்தமாக பதில் சொல்வார்கள்.*

(எ) தருமபுரி மாவட்டம், சேங்காடள்ளி கிராமத்திற்குள் அருந்ததியரும், கிருஷ்ணகிரி மாவட்டம், கல்கூர் கிராமக் கோயிலுக்குள் தலித் மக்களும் செல்ல முடியாததால் ஏற்பட்ட பதற்ற நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்கு உட்பட்ட கம்பையனூர் அடுத்த சேங்காடள்ளி கிராமத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக அருந்ததியர் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் தடுப்புச் சுவரை எழுப்பி, அந்த மக்கள் கிராமத்திற்குள் செல்ல முடியாமல் ஒரு தீண்டாமைச் சுவரை எழுப்பியிருக்கின்றார்கள். ஆகவே, அந்தச் சுவரை அகற்றுவதற்கு அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், கிருஷ்ணகிரி மாவட்டம் கல்கூர் என்ற கிராமத்தில் கோயிலுக்குள் தலித் மக்கள் உள்ளே செல்வதற்கு முற்பட்டபோது சாமியைத் திருடிக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஆகவே, அங்கே உள்ளே செல்ல முடியாத ஒரு பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நீங்கள் என்னை இன்று காலையில் 9-15 மணிக்கு சந்தித்து இதுபற்றி ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.*

2012 மே 15] [திரு. செ. தாமோதரன்]

கேட்டீர்கள். இந்தத் திட்டத்திலே 93 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதென்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். (குறுக்கீடு) இதிலே விளக்கம் வேண்டாம். (குறுக்கிடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் அதைத் தனியாக என்னிடம் கேளுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து தனியாக என்னிடம் விளக்கம் சொல்லுங்கள்.

(ஊ) செங்குன்றம் பகுதியிலிருந்து ஆந்திராவிற்கு ரேஷன் அரிசி கடத்தப்படுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை தமிழ்நாடு அரசின் பொது வினியோகத் திட்ட ரேஷன் அரிசி இரயில்கள்மூலம் அண்டை மாநிலமான ஆந்திராவிற்குக் கடத்தப்பட்டு, கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதைத் தடுக்கும் விதமாக, ஆந்திராவிற்குச் செல்லும் அனைத்து இரயில்களிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சார்ந்த 60 பெண் காவலர்கள் உதவியோடு தீவிர சோதனைகள் மேற்கொண்டு, இரயில்கள் மூலம் ரேஷன் அரிசி கடத்தப்படுவது தடுக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டதால், கடத்தல்காரர்கள் பேருந்துகள்மூலம் ரேஷன் அரிசி கடத்தலில் ஈடுபட்டு வருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர், 12-5-2012 அன்று இரவு 9-30 மணியளவில் செங்குன்றம் சோதனைச் சாவடி அருகே வாகனத் தணிக்கை மேற்கொண்டிருந்தபொழுது, அவ்வழியாக சென்னை-நெல்லூர் சென்று கொண்டிருந்த ஆந்திர அரசுப் பேருந்தினை, அதாவது தடம் எண் 5110-பேருந்து எண் AP 28-Z 5739 என்கிற அந்தப் பேருந்தினை நிறுத்தி சோதனை செய்ததில், அதில் 50 கிலோ எடை கொண்ட 40 மூட்டைகள் ரேஷன் அரிசி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

முற்பகல் 11-05

ரேஷன் அரிசியை ஏற்றிக் கொண்டுவந்த திலகா, ராதா, வேணா, கோட்டீஸ்வரி, தனம்மாள் மற்றும் குருவம்மாள் ஆகியோரை விசாரணை செய்ததில் தாங்கள் ஆந்திராவிலிருந்து காய்கறிகளை சென்னைக்குக் கொண்டுவந்து, அவற்றை விற்பனை செய்து கிடைக்கும் பணத்தில் செங்குன்றம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள பொது மக்களிடமிருந்து ரேஷன் அரிசியை வாங்கி, அதனை ஆந்திராவிற்குக் கடத்திச் செல்வதாகத் தெரிவித்துள்ளனர். அரிசி கடத்தலுக்கு உடந்தையாக இருந்த ஆந்திரப் பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநரான வெங்கடேஸ்வரலு என்பவரை விசாரித்ததில், அரிசி கடத்துபவர்களிடமிருந்து கணிசமான தொகையைப் பெற்றுக் கொண்டு, வேறு எந்தப் பயணிகளையும் ஏற்றாமல், கடத்தலுக்குத் தகுந்தாற்போல் பேருந்தின் இருக்கைகளை மாற்றி அமைத்தும், உள் விளக்குகளைப் போடாமலும் வந்ததாகத் தெரிவித்தார்.

மேலும், வழக்கில் சம்பந்தப்பட்ட ஆந்திர அரசுப் பேருந்து, பயணச் சீட்டு வழங்கும் இயந்திரம் மற்றும் பொது விநியோகத் திட்ட அரிசி ஆகியன கைப்பற்றப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். வழக்கு சம்பந்தமாக, ஆந்திர அரசுப் பேருந்து கழக உயர் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, யாரிடமிருந்து அரிசியை வாங்கினார்கள் என்பது குறித்து அதிகாரிகள் விசாரணையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், பொது விநியோகத் திட்ட ரேஷன் அரிசி கடத்தலை முற்றிலும் தடுக்கும்விதமாக, அரிசி கடத்தலில் ஈடுபட்ட (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேரும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்; கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, ஆந்திராவைச் சேர்ந்த 13 நபர்கள் உட்பட மொத்தம் 213 நபர்கள் கள்ளச் சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் ஆறு மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதனையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாவட்ட எல்லைகளில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டும், அண்டை மாநிலங்களுக்கு அரிசி கடத்துபவர்கள்மீது கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்வதோடு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் 200 வாகனங்களில் அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ந்து கடத்திக் கொண்டிருந்தார்கள்; ஆட்சியாளர்களுடைய உடந்தையோடு அரிசி கடத்தப்பட்டது என்பதையும் இந்த அவைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதியில் அரசு மணல் குவாரிகளின் விதிகளை மீறி மணல் அள்ளுவதைத் தடுத்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களும், எழுப்பிய இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள் ஆற்றிலே மணல் அதிகமாக அள்ளப்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், ஒரு மீட்டர் ஆழத்திற்குமேல் மணல் அள்ளக்கூடாது என்று ஆணையிட்டு, அந்த அளவிற்குத்தான் அள்ளிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள் நேற்றையதினம் நடந்ததைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து, அதற்குண்டானவர்களைக் கைது செய்திருக்கின்றோம் என்பதைச் சொல்லி, இதுபோன்று ஒரு வருட காலத்திற்குள் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13 கோடி ரூபாய் அபராதத் தொகையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)